

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கழக மாநில மாணவர் அணிச் செயலாளர் திருமதி வீரமணி, துணைச் செயலாளர்கள் மன்னை த. சோழராஜன், சேலம் தமிழரசன், திருமதி பூர்ணசங்கீதா, கோகுல், ராமகிருஷ்ணன், சுரேஷ் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள் உள்ளார்.

சைதாப்பேட்டையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் பங்கேற்கிறார்!

சென்னை தெற்கில் 12 இடங்களில் சமையல் எரிவாயு - பெட்ரோல் தட்டுப்பாட்டை சரி செய்யக்கோரி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னைத் தெற்கு மாவட்டத்தில் 12 இடங்களில் இன்று (15-03-2026) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி அளவில் தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய NDA அரசையும், அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 12 இடங்களில் நடைபெற உள்ளது. தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை. அடுப்பு எரிப்பதற்கு கேஸ் சிலிண்டரும் இல்லை என்ற அவல நிலை தொடர்ந்து வருகிறது.

இதனை உடனே சரி செய்யக்கோரி மாண்புமிகு கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசின் பிரதமருக்கு கடிதம் எழுதியும் எள் முனையளவும் நடவடிக்கை எடுக்கவில்லை. தமிழ்நாட்டுக்கு நிதியும் இல்லை. தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி எந்தத் திட்டங்களும் இல்லை. எல்லா வகையிலும் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசினையும், அதன் தவறான வெளியுறவு கொள்கையையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற உள்ளது. சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் தலைமையில் சைதாப்பேட்டை கலைஞர் பொன்விழா வளைவு அருகில் நடைபெற உள்ளது. சோழிங்கநல்லூர் மத்திய பகுதி கழக செயலாளர் எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ தலைமையில் சோழிங்கநல்லூர் சிக்னல் அருகில் நடைபெற உள்ளது. கலைஞர் நகர் தெற்கு பகுதி கழக செயலாளர் கே.கண்ணன் தலைமையிலும், ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ முன்னிலையிலும் கலைஞர் நகரில் உள்ள எம்.ஜி.ஆர் நகர் மார்க்கெட் அருகில் நடைபெற உள்ளது. மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ தலைமையில் காரம்பாக்கம் சுபம் காம்ப்ளக்ஸ் அருகில் நடைபெற உள்ளது. கலைஞர் நகர் வடக்கு பகுதி கழக செயலாளர் மு.ராசா தலைமையில் விருகம்பாக்கம் மார்க்கெட் அருகிலும் நடைபெற உள்ளது. வேளச்சேரி கிழக்கு பகுதி கழக செயலாளர் எம்.விநாயகமூர்த்தி தலைமையில் அடையார் பி.எஸ் .என்.எல் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் அருகில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் என்.வி என்.கனிமொழி சோமு பங்கேற்கிறார். வேளச்சேரி மேற்கு பகுதி கழக செயலாளர் வே.ஆனந்தம் தலைமையில் விஜய நகர் 1வது பிரதான சாலை அருகிலும் நடைபெற உள்ளது.

சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி கழக செயலாளர் பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் தலைமையில் பெருங்குடி - ஓ.எம்.ஆர். சாலை அண்ணல் அம்பேத்கர் சிலை அருகிலும், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி கழக செயலாளர் வி.இ.மதியழகன் தலைமையில் நீலாங்கரை காமராசர் சாலை அருகில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் பங்கேற்கிறார்.

மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே. ராஜன் தலைமையில் முகப்பேர் மேற்கு பேருந்து நிலையம் அருகிலும் நடைபெற உள்ளது. வில்லிவாக்கம் ஒன்றிய கழக செயலாளர் துரை. வீரமணி தலைமையில் அயப்பாக்கம் வாட்டர் டேங்க் அருகிலும், புனித தோமையர்மலை தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கோவிலம்பாக்கம் வெங்கடேசன் தலைமையில் மாம்பாக்கம் சாலை அருகில் மேடவாக்கத்திலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற உள்ளது.

எனவே இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்களில் அந்தந்த பகுதிகளுக்குட்பட்ட தி.மு.க கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளை சார்ந்த தோழர்கள், செயல் வீரர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி க் கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள் பெரும் திரளாக பங்கேற்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றி பெற வைப்போம் அலைகடலென திரண்டு வாரீர்! வாரீர்!! என அன்போடு அழைக்கிறோம்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன்,
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

கழக மாணவர் அணியினர் திரளாகப் பங்கேற்போம்!

செயலாளர் திருமதி வீரமணி தலைமையில் நடைபெற்ற நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, மார்ச் 15–

மதச்சார்பற்ற கூட்டணி சார்பில் இன்று நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் கழக மாணவர் அணியினர் திரளாகப் பங்கேற்க மாணவர் அணி செயலாளர் திருமதி வீர மணி தலைமையில் நடைபெற்ற நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழக மாணவரணி மாநில நிர்வாகிகள் கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

கழக மாணவரணி செயலாளராக நியமித்தமைக்கு நன்றி

2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் கழக மாணவர் அணி மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி நிர்வாகிகள் தாய்க்கழகத்தோடு இணைந்து பணியாற்ற மண்டல வாரியாக மாநில நிர்வாகிகள் ஒருங்கிணைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கழக மாணவர் அணி சார்பாக கல்லூரிகளில் அமைக்கப்பட்ட தமிழ் மாணவர் மன்ற நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களை தேர்தல் பரப்புரைக்கு முழுமையாக பயன்படுத்தகூட்டத்தில்தீர்மானிக்கப்பட்டது

மாவட்ட அளவில் மாணவர் அணி சமூக வலைதள பொறுப்பாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு தேர்தல் பணியாற்ற தீர்மானிக்கப்பட்டது.

ஒன்றிய அரசினை கண்டித்து தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழக மாணவர் அணி நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பத்திரிகையாளர்களுக்கு மருத்துவக் காப்பீடு - வீட்டு மனை - ஓய்வூதிய உயர்வு உள்ளிட்ட அறிவிப்புகள்:

முதல்வருக்கு தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் நன்றி!

சங்க நிர்வாகிகள் அறிக்கை!

சென்னை, மார்ச் 15–

பத்திரிகையாளர் சங்கத்தினரின் கோரிக்கையை ஏற்று மருத்துவக் காப்பீடு, வீட்டுமனை மற்றும் ஓய்வூதிய உயர்வு உள்ளிட்ட அறிவிப்புக்கு – WJUTயின் நன்றி அறிக்கை வருமாறு:–

இது தொடர்பாக தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் அ. ஜெ.சகாயராஜ், மாநிலப் பொதுச் செயலாளர் பா.பிரதீப்குமார், மாநிலப் பொருளாளர் இரா.ராம்ஜி ஆகியோர் வெளியிட்டுள்ள நன்றி அறிக்கையில் கூறியிருப்பதாவது;

சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று பத்திரிகையாளர் சங்கத்தின் பிரநிதிகள் முதலமைச்சர் அவர்களை சந்தித்தனர். அப்போது அவர்கள் பெற்றுவரும் ஓய்வூதியத்தில் உயர்வு, மருத்துவக் காப்பீடு மற்றும் வீட்டுவசதி உள்ளிட்ட கோரிக்கைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் முன்வைத்தனர்.

பத்திரிகையாளர்கள் சங்கத்தினரின் கோரிக்கையினை ஏற்கும் வகையில் பத்திரிகையாளர்கள் தற்போது பெற்றுவரும் ஓய்வூதியம் மாதம் 12,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாகவும், குடும்ப ஓய்வூதியம் 6,000 ரூபாயிலிருந்து 7,500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார்.

அதேபோல, அங்கீகார அடையாள அட்டை வைத்திருக்கும் மருத்துவக் காப்பீட்டு அனைவருக்கும் முதலமைச்சரின் விரிவான திட்டத்தின்கீழ் மருத்துவ காப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளார்.

மேலும், சென்னை பத்திரிகையாளர்கள் குடியிருக்க வீடு அல்லது வீடுகட்ட நிலம் ஒதுக்கித் தர வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாக, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் செங்கல்பட்டு மாவட்டத்தில் வீட்டுமனைகள் வழங்க ஏற்பாடு செய்யவும், இதற்கு பத்திரிகையாளர்கள் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் துவக்கி நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தியுள்ளார்.

கோரிக்கை வைத்த சில மணி நேரங்களில் முக்கியமான கோரிக்கைகள் நிறைவேற்றம். ஏனைய கோரிக்கைகள் மீதும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவாதம் தந்துள்ளார்.

இந்த அறிவிப்பு உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் அனைவருக்கும் மிகுந்த மன மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், செய்தி தொடர்பு துறை சார்ந்த அதிகாரிகள் அனைவருக்கும் எங்களது "தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் சார்பாகவும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பத்திரிகையாளர்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம் என மாநிலத் தலைவர் அ. ஜெ.சகாயராஜ், மாநிலப் பொதுச் செயலாளர் பா.பிரதீப்குமார், மாநிலப் பொருளாளர் இரா.ராம்ஜி ஆகியோர் விடுத்துள்ள நன்றி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது..

அதானே

இ.டி. இன்கம்டேக்ஸ் சிபிஐ இவற்றோடு
முப்படையை திரட்டிக் கொண்டு வந்தாலும்
சரி

இல்லை

அவற்றை எல்லாம் காட்டி
இன்னும் எஞ்சியுள்ள கட்சிகளை எல்லாம்
மிரட்டிக் கொண்டு வந்தாலும் சரி..

சித்திரைத்
திங்களில்

செயின்ட் ஜார்ஜ் கோட்டையில்

முதலமைச்சர்
இருக்கையில்
அமர்ந்து
ஒலிக்கப் போவது
என்னவோ



"முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்
என்னும் நான்"
என்னும்
அந்த கம்பீரக் குரல் தான்...

என்ன நாஞ் சொல்றது!

மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்



எழும்பூர்: தொகுதி மேம்பாட்டு நிதியில் 53 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில்

கே.பி.பார்க் குடியிருப்பில் சுற்றுச்சுவர் கட்டும் பணி!

இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்!

சென்னை, மார்ச்.15- கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 53.00 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் வார்டு எண்.77, புளியந்தோப்பு, டிமலஸ் சாலை, கே.பி.பார்க் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு வளாகத்தில் சுற்றுச் சுவர் கட்டும் திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

இக்குடியிருப்பில் வசித்துவரும் பொதுமக்கள் தமது வளாகத்தில் சுற்றுச்சுவர் கட்டித் தர வேண்டும் எனத் தன்னிடம் முன்வைத்த கோரிக்கையை நிறை வேற்றித் தரும் விதமாக, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 53.00 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்து, இச்சுற்றுச்சுவர் கட்டுமானப் பணியைத் தொடங்கி வைத்திருக்கிறார்.

இந்நிகழ்வில் அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதி மா.காந்தி. 108வது வட்டத் துணைச் செயலாளர் கே. சீனிவாசன், எழும்பூர் தொற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.சிலம்பரசன், 77வது வட்ட அவைத் தலைவர் டி.விஸ்வநாதன், வட்டப் பொருளாளர் எம்.வெங்கட், பகுதிப் பிரதிநிதிகள் முனுசாமி, ஏ.யு.மணிவண்ணன்; 77 'அ' வட்டத் துணைச் செயலாளர் ஆர். ஆரோக்கியம், சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜான்சி ராணி, 108 'அ' வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், 77வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சி. சதிஷ், 77 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தன.பிரபாகரன், உதய நிதி, சூர்யா; 78வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வேலன், ஜெகன்; 78 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மகேஷ்குமார், 58 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜ்குமார், 61வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் நித்திஷ் கிரிதரன், 99 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சு.குணா, முன்னாள் அவைத் தலைவர் கி.புஷ்பராஜ், கோமகன், நந்தகோபால், எட்டு (எ) விஜயகுமார், ஜெ. சரவணன், எல்.குணசேகர், நேரு பிரபா, சுந்தர்ராஜ், கபிலன், வழக்கறிஞர் ஆர்.தர்மதுரை, பன்னீர் செல்வம், பாக முகவர் கவிதா, பாக முகவர் கார்த்திகேயன்; சத்யகலா, டி.பாளையம், கே.பி.பார்க் பாளையம், சசி குமார், கே.கோகுலகிருஷ்ணன், எழிலரசி, கலா உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், அணிகளின் அமைப்பாளர்களும், கழகச் செயல்வீரர்களும் கலந்துகொண்டனர்.

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 53.00 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் வார்டு எண்.77, புளியந்தோப்பு, டிமலஸ் சாலை, கே.பி.பார்க் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு வளாகத்தில் சுற்றுச்சுவர் கட்டும் திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

கழக மாநில மாணவர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் மாணவர் அணி செயலாளர் திருமதி வீரமணி தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. இதில் துணைச் செயலாளர்கள் மன்னை த. சோழராஜன், சேலம் தமிழரசன், திருமதி பூர்ணசங்கீதா, கோகுல், ராமகிருஷ்ணன், சுரேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.